**O.S. No. 238/2021**

**Date :22.01.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 1 **திரு.சங்கீதா**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனது அப்பா மற்றும் எனது சகோதரன் என்னிடம் கடன் வாங்கி இருந்ததாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ரூ.14 லட்சம் கடன் வாங்கப்பட்டுள்ளது. யாரிடம் அந்த ரூ.14 லட்சம் தரப்பட்டது என்றால் இருவரையும் நான் எனது வங்கிக்கு அழைத்து சென்று வங்கியில் இருந்து பணத்தை எடுத்து இருவரிடமும் நான் கொடுத்தேன். இருவரிடமும் சேர்த்து தான் நான் அந்த பணத்தை கொடுத்தேன். அதற்காக இரண்டு புரோநோட்டுகள் வாங்கிக் கொண்டோம். நான் காஞ்சிபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

2. எனது அப்பா மட்டும் தம்பி இரண்டு புரோநோட்டுகள் எழுதி தர வேண்டுமென சொன்னதன் பெயரில் இரண்டு புரோநோட்டுகள் அவர்கள் எழுதிக் கொடுத்தார்கள் இரண்டு புரோநோட்டுகள் எனது அப்பா முதலிலும் இரண்டாவது எனது தம்பியும் கையெழுத்து போட்டு உள்ளார்கள். சாட்சி கையெழுத்து ஷீலா என்பவர் கையெழுத்து போட்டார் அவர் எங்கள் குடும்ப உறவினர் தூரத்து உறவினர். ஷீலா மதுரையில் குடியிருந்து வருகிறார். எனது அக்கா சின்னாளம்பட்டியில் குடியிருந்து வருகிறார். வெங்கடேசன் என்பவர் அந்த புரோநோட்டை எழுதினார். அவர் பதிவு செய்யப்பட்ட எழுத்தரா என்று எனக்கு தெரியாது. 5–ம் தேதி மற்றும் 7–ம் தேதி இரண்டு நாட்களில் நான் பணம் கொடுத்தேன்.

3. தற்போது நான் சொன்ன விபரத்தை தாவாவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இவ்வாறு பிரித்து நான் சொல்லவில்லை. இரண்டு நாட்களிலும் காலை 11 மணியிலிருந்து மதியம் 2 மணிக்குள் அந்த பணத்தை கொடுத்திருப்பேன்

நேரம் என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல முடியாது. எனது வங்கி கணக்கு பட்டியலைப் பார்த்தால் ரூ. 14 லட்சம் மட்டுமே அந்த காலகட்டத்தில் நான் வங்கியில் இருந்து பணம் எடுத்த விபரம் தெரியும் என்றால் சரிதான். அன்றைக்கு தேதியில் நான் ரூ.14 லட்சம் மட்டுமே கொடுத்திருந்தேனா என்றால் சரிதான். உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் எனது தந்தையானவர் தனது சொத்தை எனது பெயருக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக நான் தாக்கல் செய்த பிராதுவில் குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான்.

4. எந்த தேதியில் அந்த பணம் கொடுத்தேன் என்றால் எனது கையிலிருந்து அந்த பணத்தை கொடுத்தேன், எந்த தேதி என்று ஞபாகமில்லை. வழக்கிற்காக தற்போது பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், தாவா புரோநோட் ஏற்பட்டதாக சொல்லும் தேதியில் தான் கிரைய ஒப்பந்தமும் ஏற்பட்டதென்று சொன்னால் அதையொட்டிய தேதியில் தான் அந்த ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.வழக்குக்காக நான் முரணாக குறிப்பிடுகிறேன் என்றும், அதே தேதியில் தான் அந்த ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்ட தேதியில் ரூ.14 லட்சம் பணம் கொடுக்கவில்லை புரோ நோட்டும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

5. ரூ. 14 லட்சம் ரூபாய் கொடுத்ததற்கு ரொக்க ரசீது எதுவும் எனது தந்தையிடம் வாங்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே நான் பணம் கொடுத்திருந்தால் அது சம்பந்தமான ரொக்க ரசீது வாங்கி இருப்பேன் என்றால் சரியல்ல. எனது அப்பா ஒரு அரசு ஊழியர் இருந்தால் சரிதான். எனது தாயாரும் ஒரு அரசு ஊழியர் என்றால் சரிதான். எனது அப்பா எனது அம்மா மற்றும் எனது சகோதரர் ஆகிய மூன்று பேர் பெயரிலும் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு சொத்திற்குமான மதிப்பு ஒரு கோடியில் இருந்து ஒன்றரை கோடி வரை இருக்கும் என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அந்த சொத்து மதிப்பு எனக்கு தெரியாத பட்சத்தில் எப்படி அந்த சொத்தை எனது அப்பா பெயரிலிருந்து ஒரு லட்சத்திற்கு நான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினேன் என்றால் அந்த தேதியில் அந்த சொத்தில் மதிப்பு எனக்கு தெரியும்.

6. தற்போது அதன் மதிப்பு எனக்கு தெரியாது. இன்றிலிருந்து 8 வருடத்திற்கு முன்பு அந்த கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மே 11, 2020 ஆம் ஆண்டு எனது தந்தை இறந்து போனார். 30.06.2021–ம் தேதியன்று எனது தாயார் இறந்து போனார். எனது அப்பாவின் ஒப்பந்தத்தை 2018 ஆம் ஆண்டிலிருந்து நான் இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனது பெற்றோர்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினாலும் லாக்டவுன் காரணம் என்பதாலும் அந்த சமயத்தில் நிறைவேற்ற இயலவில்லை கிரைய ஒப்பந்தத்தில் கண்டுள்ள பாக்கி கிரைய தொகையான ரூ. 5 ஆயிரத்தை என்னால் கொடுக்க இயலாத சூழ்நிலையில் நான் ரூ.14 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்வது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

7. இந்த வழக்கு நடைபெறும்போது எனது தம்பி எனது பெற்றோர்களது நகைகள் 50 சவரன் திருடிவிட்டதாக நான் காவல் நிலையத்தில் அவருக்கு எதிராக புகார் தெரிவித்திருந்தேன் என்றால் சரியல்ல. எனது பொருளை எடுக்க எனது தம்பி அனுமதிக்கவில்லை என்றுதான் நான் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தேன். அந்தப் புகாரானது 2022 அக்டோபர் மாதம் காவல் நிலையத்தில் தரப்பட்டது. எனது அப்பா மற்றும் தம்பி உண்மையிலேயே எழுதி தாவா புரேநோட் எழுதிக் கொடுத்திருந்தால் 3 ஆண்டுகளில் நான் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது அப்பா உயிருடன் இருந்த சமயத்தில் நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தொகைக்கு வட்டி எதுவும் வாங்கியிருந்தேனா என்றால் வட்டி எதுவும் வாங்கவில்லை.

8. எனது பெற்றோர்கள் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும், அவர்கள் உயிருடன் இருக்கும் காலம் வரை அதனால் தான் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது சகோதரியும் சேர்ந்து பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதனால் தான் எனது சகோதரி இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. மதுரையிலும், திருப்பத்தூரிலும் குடியிருந்து வரும் எனது தகப்பனார்

மற்றும் எனது சகோதரர் என்னிடம் கடன் வாங்கியதாக கூறுவது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் உறவினர்கள் என்னுடன் இணக்கமாக பகை இல்லாமல் இன்றளவும் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

9. ரூ. 14 லட்சம் ரூபாய் நான் பணம் கொடுத்ததாக சொல்லும் நிகழ்விற்கு எனது உறவினர்களையே சாட்சியாக நாங்கள் போட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. நானாக புரோநோட் உற்பத்தி செய்யப்பட்டதால் தான் உறவினர்கள் யாரையும் அதில் சாட்சியாக போடவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனது அப்பாவிற்கு நான் பணம் கொடுத்து இருந்தால் ரூ.1 லட்சத்திற்கு எனது அப்பா ஒப்பந்தம் பதிவு செய்து கொடுத்த பட்சத்தில் இந்த கடன் பத்திரத்தையும் பதிவு செய்து கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. எனது அப்பாவும், எனது சகோதரரும் கையெழுத்து போடவில்லை என்றும், அதை நிருபிக்க இன்றளவும் நான் தயாராக இருக்கிறேனா என்றால் எனது அப்பா கையெழுத்து அடங்கிய ஆவணங்கள் எதையும் எனது சகோதரர் எடுப்பதற்கு என்னை அனுமதிக்கவில்லை என்பதால் என்னால் அந்த கையெழுத்துக்களை நிரூபிக்க முடியாது ஏற்கனவே கிரைய ஒப்பந்தத்தில் எனது அப்பாவின் கையெழுத்து உள்ளதென்றும், அந்த கையெழுத்து அடங்கிய ஆவணத்தின் உதவியுடன் இந்த தாவா புரோநோட் போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. இந்த வழக்கு நான் பொய்யாக தகவல் செய்துள்ளேன் என்றும், சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த தாவா புரோநோட்ள போலியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் எனது சகோதரிக்கும் எனது அப்பா எந்த சொத்தும் எழுதி தரவில்லை என்றும், அந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த தாவா புரோநோட் போலியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தம்பிக்கு எதிராக பல நீதிமன்றங்களில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் செலவு தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

1. நான் ஒரு அரசு ஊழியர். ஒரு நபருக்கு கடன் கொடுக்கும் பட்சத்தில் அந்த கடன் கொடுத்த விபரத்தை உங்கள் உயர் அதிகாரிகளுக்கும் உங்கள் அலுவலகத்திற்கும் தெரிவிக்க வேண்டிய கடமை உள்ளது என்ற விவரம் உங்களுக்கு தெரியும். இந்த கடன் கொடுத்த விபரம் உங்களது உயர் அதிகாரிகளுக்கு 30 நாட்களுக்குள் தெரிவித்துள்ளீர்களா என்றால் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவிக்காததற்கு காரணம் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே பணம் கொடுத்ததால் அந்த தகவலை எனது உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவில்லை.

2. இந்த கடன் கொடுத்த விபரத்தை வருமான வரி கணக்கில் தெரிவித்துள்ளீர்களா என்றால் நான் கடன் வாங்கித்தான் இந்த கடனை கொடுத்தேன் என்பதால் வருமான வரி கணக்கில் அதை காட்டவில்லை. நான் வாங்கிய கடனை 2018 –ல் இருந்து 2023 ஆம் வருடம் வரை அந்த கடனை திருப்பி செலுத்தி விட்டேன். அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஏதேனும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, அவ்வாறு கடன் வாங்கிய விபரத்தையோ கடனை அடைத்த விபரத்தையோ எனது உயர் அதிகாரிகளுக்கு நான் தெரிவித்தேனா என்றால் அதையும் தெரிவிக்கவில்லை.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.22 15:53:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.